ரச்சேலின் நூலகம்

ரிச்சர்ட் உங்கர்

தமிழில் கிருஷ்ணன்

செலம் மக்களுக்கு ஒரு சொல்ல முடியாத பிரச்சனை. மற்ற ஊர்காரர்கள் அவர்களை ஒரு வித்தியாசமாக கருதுகிறார்கள். சில சமயம் முட்டாள்கள் என்று கூட கூறுகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் அப்படி. இதனால் மற்றவர்களுக்கு முன் “எப்படி நாங்களும் அறிவாளிகள் முட்டாள்கள் இல்லை” என்று நிரூபிப்பது என்பது ஒரு சவாலாய் போனது. அதனால் ஒரு குழுவை தேர்ந்தெடுத்து அவர்கள் வார்சாவிற்கு அனுப்புகிறார்கள். பயணத்தில் ரச்சேல் ஒளிந்து கொண்டு போய் அப்பாவோடு சேர்ந்து கொள்கிறார்கள். வார்சாவிற்கு வந்த குழு பலவகை மக்களையும், பொருட்களையும் காண நேரிடுகிறது. அதிலிருந்து குழுவில் ஒவ்வொருவருக்கும் ஒரு யோசனை வந்தாலும் அவர்கள் ஊருக்கு ஏற்றார் போல ஒரு நல்ல விஷயம் அமைவது கடினமாக இருந்தது. அவர்களுடைய இந்த ஏமாற்றம் வார்சா நூலகத்திற்க்கு வண்டி வந்து நின்ற போது ரச்செலின் நுண்ணறிவால் மாறியது. ரச்சேல் எப்படி செலம் மக்கள் அறிவாளிகள் தான் முட்டாள்கள் இல்லை என்பதை உலகிற்கு நிரூபிக்கிறாள் என்பதே கதை. எழுத்தாளர் “ரிச்சர்ட் உங்கர்” இந்த அழகான கதையை அந்த ஊர் மக்களின் சுவாரசியமான குணாதிசயங்களோடும், நுட்பமான நகைச்சுவையுடனும், வண்ணங்களுடனான படங்கள் கொண்டும் நமக்கு படிப்பதற்கு விருந்தாக அளிக்கிறார்.

ரச்சேலின் நூலகம்

ரிச்சர்ட் உங்கர்

தமிழில் கிருஷ்ணன்

செலம் மக்களே நமக்கு எப்போதும் இல்லாத ஒரு பிரச்சனை வந்திருக்கிறது என்று ஆச்சாரி சிமோன் கூடியிருந்த எல்லோருக்கும் சொல்லி கொண்டிருந்தார்.
“உங்க ஊர் ஒரு விசித்திரம் தான் என்று கேள்விப்பட்டேன். இங்கு எல்லோரும் காலை உணவை இரவும், இரவு உணவை காலையும் சாப்பிடுவீங்களாமே” என்று ஒருவர் கேட்டார். அவருக்கு நான் பதிலளிக்கும் முன்னரே விழுந்து விழுந்து சிரிக்கிறார். அன்றொரு நாள் லுபிளின் என்ற ஊருக்கு போயிருந்தபோது போர்ட்டர் ஒருவர் பேசியதை கேட்டேன்
“இந்த செலம் மக்கள் பழக்க வழக்கம் எல்லாம் ஒரு முட்டாள் தனமாக தான் இருக்கிறது. காலில் அணியும் காலுறையை கையில் போட்டு கொள்கிறார்கள். கையில் அணியும் கையுறையை காலில் அணிந்து கொள்கிறார்கள். இதை போன்ற வினோதமான மக்கள் எங்காவது இருக்கிறார்களா.” என்று பேசிக் கொண்டிருந்தார்.

தண்ணீர் கொண்டு செல்லும் இஸ்ஸி “அது உண்மை தானே குளிர்காலத்தில் அப்படி தானே நாம் இருக்கிறோம்” என்றார்.
“இது ஒரு உதாரணம் தான். வெளியூர்காரர்கள் நம்மை முட்டாள் என்று கூறுவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கணும்” என்றார் சிமோன்.
“ஆமாம் என்று ஊர்க்காரர்கள் எல்லோரும் தலையாட்டினார்கள். நம்ம ஊர் மக்களும் ஞானம் உடையவர்கள் தான் என்று புரிய வைப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டும்” என்றார் சிமோன்.
நீண்ட உரையாடலுக்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தார்கள் ஊர்மக்கள். ஒரு குழுவை தலைநகர் வார்சாவுக்கு அனுப்ப திட்டமிட்டார்கள். இந்த பிரச்சினைக்கு தீர்வு வார்சாவில் கண்டிப்பாக கிடைக்கும் என்று நினைத்தார்கள் அந்த ஊர் மக்கள்.

எப்போதும் குழுவை தேர்ந்தெடுக்கும் முன் ஒரு படம் வரையும் போட்டி வைப்பது அந்த ஊரின் பழக்கமாகும். ஊரில் உள்ள பெரியவர்கள் எல்லா மக்களையும் படம் வரையும் போட்டிக்கு அழைத்தார்கள். சிமோன் அசத்தலான ஒரு படம் வரைந்து எல்லோரையும் வியப்பில் ஆற்றினார். இஸ்ஸி, கல்யாண தரகர் மிரியம் இருவரும் வரைந்த படங்களும் எல்லோரையும் ஈர்த்தன. ஆகையால் சிமோன், இஸ்ஸி, மிரியம் மூன்று பேர் கொண்ட குழுவை வார்சாவுக்கு அனுப்பி வைக்க முடிவு செய்தனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட குழு அடுத்த நாள் காலை வார்சாவுக்கு புறப்பட்டது. வண்டி பள்ளங்களில் ஏறி இறங்கும் போது ஏதோ கனமான பொருள் மூட்டைகளுக்கு நடுவில் உருளுவதை போல உணர்ந்தார் சிமோன். சிறிது நேரத்திலேயே ஏதோ தும்மல் சத்தம் கேட்டது. மேலே மூடி வைக்கப்பட்ட துணியை விலக்கினார்.

“ரச்சேல் ! “
“ஹலோ அப்பா, என்ன அருமையான நாள் இது வார்சாவுக்கு செல்வதற்கு” என்றாள் ரச்சேல் .
“நீ இங்கு இருக்க முடியாது… அம்மாவுக்கு உதவியாக இருக்க வேண்டிய நேரத்தில் நீ இங்கு என்ன செய்கிறாய்” என்றார் சிமோன்.
“என் அவசியம் அம்மாவுக்கு இன்று இல்லை அப்பா. நீங்க கவலைப்படாதீங்க நான் உங்களை தொந்தரவு செய்யவே மாட்டேன்.” என்றாள் ரச்சேல் .
“நான் என்னை முழுதாக ஈடுபடுத்தி கொள்ள ஒரு பொருளை எடுத்து வந்து உள்ளேன்” என்று சொல்லி ஒரு புத்தகத்தை பையிலிருந்து எடுத்தாள். அந்த புத்தகத்தின் பெயர் “டிடெக்ட்டிவ் டெபோராவும் ஒரு வித்தியாசமான வழக்கும்” என்பதே.
“சரி நீ எங்களோடு வரலாம் ஆனால் நினைவில் வைத்துக் கொள் இது வேலை சம்பந்தமான பயணம். லுபெல்ஸ்கி தெருவில் மிட்டாய் கடையில் நிறுத்த வேண்டும் என அடம் பிடிக்க கூடாது” என்றார் சிமோன்.
“ரொம்ப நன்றி அப்பா!” என்று சொல்லி அப்பாவை அணைத்து கொண்டாள் ரச்சேல் . பிறகு தான் கொண்டு வந்த புத்தகத்தில் ஆழ்ந்து விட்டாள்.



காலை, மதியம் முழுதும் பயணம் செய்தனர். சாயங்காலம் வார்சா வந்து சேர்ந்தனர். நகரம் பரபரப்பாக இருந்தது. வயதானவர்கள், சிறுவர்கள்,
வேலையாட்கள், வியாபாரிகள், அறிஞர்கள் என எல்லோரையும் பார்க்க முடிந்தது. நகரமே பேச்சும், சிரிப்பும், சத்தமுமாக நிறைந்திருந்தது.
இஸ்ஸி வண்டியை நகரத்தின் பெரிய சாலைக்கு கொண்டு சென்றார். உயரமான கட்டிடங்களை வியந்து பார்த்த இஸ்ஸி “இங்குள்ள வீடுகள் எத்தனை உயரமாக இருக்கின்றன. பறவைகள் கூட இந்த வீடுகள் இருக்கும் உயரத்திற்கு பறந்து செல்ல முடியுமா என்பது சந்தேகம் தான். நம்ம ஊர் செலத்திலேயும் இப்படி உயரமான வீடுகளை கட்டினால் நம்மை யாரும் முட்டாள் என்று அழைக்க மாட்டார்கள்” என்றார் இஸ்ஸி.
“என்னால் முடியாது, யாருக்கு இவ்வளவு உயரமான வீடு வேண்டும்” என்றார் மிரியம். “அந்த உயரத்தில் இருந்து சாரா என்ன தைக்கிறாள் என்று பார்க்க தான் முடியுமா? இல்லை செல்மா சமைக்கும் வாசம் தான் என் வீடு வரை வருமா?” என்று மிரியம் சொன்னதை கேட்டு எல்லோரும் ஆமாம் என்று ஒத்துக் கொண்டார்கள்.





தெருக்கள் குறுகி நெடும் கட்டிடங்கள் மறைந்து நிறைய கடைகள் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். நீண்ட தொப்பி, அழகான கோட், காலில் மின்னுகிர பூட், ஆகியவை அணிந்து ஒருவர் கடையிலிருந்து ஒருவர் வெளியே வந்தார்.
“அந்த மனிதரை பாருங்கள் என்று வியந்து நின்றார் இஸ்ஸி. நம் ஊரில் எல்லோரும் இவர் பாணியில் உடை அணிந்தார்கள் என்றால் நம்மை யாரும் முட்டாள் என்று கூற மாட்டார்கள்” என்று சொன்னார் இஸ்ஸி.
“ஆனால் இஸ்ஸி இந்த நீண்ட தொப்பியால் என்ன பயன் நமக்கு. அதை எங்கும் எளிதில் மாட்டவும் முடியாது, அதை வைத்து குளிர் காயவும் முடியாது. அதற்கு நாம் அணியும் கம்பளி தொப்பி எவ்வளவோ மேலானது. பின் நம் வயல்வெளியில் பூட்ஸ் அணிந்து செல்ல என்ன அவசியம் இருக்கிறது” என்றார் சிமோன்.
“சிமொன் சொல்வதில் உண்மை இருக்கிறது” என்று எல்லோரும் ஒப்பு கொண்டனர். அங்கிருந்து எல்லோரும் நகர்ந்தனர்.

அடுத்து ஒரு பரபரப்பான சந்தைக்கு வந்து சேர்ந்தனர். எல்லா வித வாசனை திரவியங்கள், மசாலா பொருட்கள் அனைத்தும் நிறைந்திருந்தது அந்த சந்தையில்.

“எனக்கு ஒரு யோசனை” என்றாள் மிரியம். அந்த கடைக்காரர் உபயோகிக்கும் எடையை பார்த்தீர்களா அதை போன்று எடையை நம் ஊரில் எல்லா கடைகளிலும் வைத்தால் நம்மை எல்லோரும் அறிவாளிகள் என்று சொல்லுவார்கள்” என்றார் மிரியம்.

“ஆனால் மிரியம், இது எப்படி பிரயோஜனமாக இருக்கும். நம் ஊர் மீன்களோ ஆற்றில் நீந்துவதற்கே விரும்புகின்றன தவிர அது எடை இயந்திரத்தில் உட்கார விரும்பாது” என்றார் இஸ்ஸி.

“இஸ்ஸி சொல்வதும் சரி தான்” என்று எல்லோரும் ஒப்பு கொண்டனர். அங்கிருந்து நகர்ந்தனர்.

சூரியன் அஸ்தமனம் ஆக தொடங்கி விட்டது. சிமோன், இஸ்ஸி, மிரியம் மூவருக்கும் ஊருக்கு திரும்பும் நேரம் வந்துவிட்டது என்று தெரியும். “வெறும் கையாக ஊருக்கு எப்படி திரும்புவது என்று தயக்கத்துடன் இருந்தனர். ஊருக்கு திரும்புவதை அல்லது வார்சா விலேயே தங்கி விடை கண்டுபிடிப்பதா?” என்று குழப்பத்துடன் இருந்தனர்.
ரச்சேல் வண்டி நின்ற இடத்தை பார்த்தவுடன் துள்ளி குதித்து இறங்கினாள். அங்கிருந்த கட்டிடத்தை காட்டி “அப்பா எனக்கு இந்த இடம் நன்றாக தெரியும். நான் அம்மாவோடு இந்த இடத்திற்கு முன்பு வந்திருக்கிறேன். இந்த கட்டிடம் ஒரு நூலகம்.”என்றாள் ரச்சேல் .
என்னது ?
“நூலகம், அப்பா. புத்தகங்கள் நிறைய இருக்கும் இடம். இங்கு எல்லோரும் அவரவர் விருப்பப்படி புத்தகங்கள் படிக்கலாம்” என்றாள் ரச்சேல்.

“சரி இந்த நூலகத்தினால் நமக்கு என்ன பயன்?” என்று தன் மகளிடம் கேட்டார் சிமோன்.
“நிறைய இருக்கிறேதே அப்பா, நல்லா யோசிச்சு பாருங்க நம்ம ஊரிலேயே ஞானம் நிறைந்திருப்பவர் என்று ஒருவரை சொல்லுங்கள் என்றால் நீங்கள் யாரை குறிப்பிடுவீர்கள்?”
“நம்முடைய பாதிரியாரை தான் சொல்லுவேன்” என்றார் சிமோன் எந்த தயக்கமின்றி.
“சரி நம் பாதிரியார் எப்போதும் என்ன செய்து கொண்டிருப்பார்? அதாவது ஜெபம் செய்யும் நேரத்தை தவிர” என்றாள் ரச்சேல் .
“சிமோன் குழப்பமடைந்தார். ஆனால் இரண்டு அறிஞர்கள் புத்தகத்தோடு நடந்து சென்றதை பார்த்தவர் நம் பாதிரியார் எப்போது புத்தகம் படித்து கொண்டிருப்பார்” என்றார் சிமோன்.
“சரியாக சொன்னீங்க அப்பா” என்றாள் ரச்சேல் . நம்ம ஊர் மக்கள் அறிவாளிகள் தான் என்று நிரூபிப்பதற்கு ஒரு நூலகத்தை நம் ஊரில் திற ப்பதை விட சிறந்த ஒன்று வேறு எதுவுமில்லை.”
அதை சொல்லி விட்டு ரச்சேல் அந்த கட்டிடத்துக்குள் ஓடி மறைந்தாள்.



சிமோன், இஸ்ஸி, மிரியம் மூன்று பேரும் ரச்சேல் கூறியதை நினைத்து யோசித்தார்கள். “செலம் ஊருக்கு நூலகம் ! இந்த யோசனையில் எந்த குறையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறிது நேரத்திலேயே ரச்சேல் நூலகத்திலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து கொண்டு வெளியே ஓடி வந்தாள்.

அந்த புத்தகம் *செலம் அறிஞர்கள் எழுதிய ஒரு தொகுப்பு*. “ஒரு புத்தகத்தை கொண்டு என்ன செய்ய முடியும்?” என்றார் சிமோன். “நமக்கு இந்த நூலகத்தில் இருக்கும் எல்லா புத்தகங்களையும் அல்லவா கொண்டு செல்ல வேண்டும் நம் ஊருக்கு” என்றார் சிமோன்.

“ஆனால் அப்பா இங்கிருக்கும் எல்லா புத்தகங்களையும் நாம் எடுத்து சென்று விட்டால் வார்சா மக்களுக்கு படிப்பதற்கு ஒரு புத்தகமும் இல்லாமல் போய்விடும். அதனால் என்னை நம்புங்கள் நமக்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு புத்தகம் போதும்.” என்றாள் ரச்சேல்

சிமோன் முணுமுணுத்தார். ஆனால் அவர்களுக்கு விவாதிப்பதற்கு நேரமில்லை . சூரியன் அஸ்தமனம் ஆகி கொண்டிருந்தது. அவர்கள் ஊருக்கு சென்றடைவதற்கு நீண்ட பயணம் காத்திருந்தது.



பொழுது விடிந்து விட்டது அவர்கள் ஊருக்கு வந்து சேரும் போது. விடியற்- காலையாக இருந்த போதும் ஊர்மக்கள் அனைவரும் ஊர் சந்திக்கு அவர்களை வரவேற்க வந்து விட்டனர்.

“ஒன்னும் இல்லையா” என்று தையல்காரர் ஹெர்செல் வண்டியின் உள்ளே எட்டி பார்த்து விட்டு செலம் மக்கள் முட்டாள்கள் இல்லை அறிவாளிகள் தான் என்று நிரூபிப்பதற்கான பொருளை கொண்டு வந்து விட்டிர்களா ?” என்று குறும்புடன் கேட்டார்.

“ரச்சேல் அதை எடுத்து காட்டு” என்றார் சிமோன்.

வார்சா நூலகத்தில் தான் இரவல் வாங்கிய புத்தகத்தை ரச்சேல் எடுத்து தண்ணீர் குழாய் இருக்கும் பெட்டியின் மேல் வைத்தாள்.
எல்லோரும் கண் இமைக்காமல் அந்த புத்தகத்தை வேடிக்கை பார்த்தனர். “இந்த புத்தகத்தில் ஏதோ மாஜிக் இருக்கிறது இல்லையென்றால் வார்சாவிலிருந்து இதை கொண்டு வந்திருப்பார்களா” என்று முணுமுணுத்தனர் ஊர்மக்கள்.
சிறிது நேரத்தில் சிமோன் ரகசியமாக ரச்சேலிடம் சொன்னார் “ரச்சேல் மக்கள் பொறுமை இழக்கின்றனர். இந்த ஒரு புத்தகத்தினால் நாம் அறிவாளிகள் என்று எப்படி நிரூபிக்க முடியும் என்று கேட்கின்றனர். நாம் தோற்று விட்டோம் என்று பேசுகின்றனர்.”
“ஆமாம் அப்பா, ஏதாவது செய்ய வேண்டும்” என்று கூறினாள் ரச்சேல் .

ரச்சேல் வீட்டிற்கு ஓடி சென்று ஒரு புத்தகத்தை எடுத்து கொண்டு திரும்பி வந்தாள். அந்த புத்தகத்தை ஏற்கனேவே வைத்திருந்த புத்தகத்தின் பக்கத்தில் வைத்தாள். திடீரென்று இருள் நீங்கி வெளிச்சம் வந்தது போல எல்லோருக்கும் ஏதோ ஒரு ஞானம் வந்தது…

“என்னிடம் ஒரு புத்தகம் இருக்கிறது அதை நான் படித்து முடித்து விட்டேன். அதை நான் தருகிறேன்.” என்றார் நெசவாளர் சாரா.
“நானும் ஒரு புத்தகம் தருகிறேன்” என்றார் தையல்காரர் ஹெர்ஷேல்.
“புத்தகங்கள் வைக்க அலமாரிகள் வேண்டுமே” என்று சொன்னார் சிமோன். அலமாரிகள் செய்வதற்கு அவருடைய பட்டறைக்கு விரைந்தார்.
“நூலகத்துக்கு சுவரும், கூரையும் சேர்த்தே கட்டி ஆக வேண்டும்” என்று கூறிவிட்டு சிமோனின் பின்னாடி சென்றார் இஸ்ஸி.
சீக்கிரம் மொத்த ஊருமே பரபரப்பாக வேலை செய்து கொண்டிருந்தது. சிலர் புத்தகங்களை அலமாரியில் அடுக்கினர். சிலர் சுவர் கட்டி கொண்டிருந்தனர். சிலர் நாற்காலிகளையும், மேஜைகளையும் கொண்டு வந்து வைத்தனர்.

நூலகம் வந்ததால் ஊர்மக்கள் குதூகலம் அடைந்து போனார்கள். அதற்கு *“ரச்சேல் நூலகம்”* என்று பெயரிட்டனர். ஊர் மக்கள் எல்லா நாளும் நூலகத்திற்கு வந்தனர். நூலகத்தில் வந்து படிப்பது ஒரு வித்தியாசமான அனுபவமாக அவர்களுக்கு இருந்தது. இஸ்ஸி போன்ற சிலர் ஒரே நாளில் மூன்று முறை வந்து போயினர். ஒவ்வொரு தடவையும் புத்தகம் எடுக்க தான் வந்தார்கள் என்று சொல்ல முடியாது, தண்ணீர் பிடிக்கவும் வருவார்கள் ஏனென்றால் அவர்கள் தண்ணீர் பிடிக்கும் குழாய் இப்போது நூலகத்துக்கு உள்ளேயே அமைந்து விட்டது.

முற்றும்